ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1932/5 - 2015 සැප්තැම්බර් මස 14 වැනි සඳුදා - 2015.09.14

*1932/5 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

*64 (5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்*

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி யொன்றான மக்கள் விடுதலை முன்னணியினால் பெயர் நியமனம் செய்யப்பட்டவரும், அரசியலமைப்பின் 99(அ) என்னும் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. சரத் சந்திரசிறி மாயாதுன்னே அவர்கள் கேட்டு விலகியுள்ளதன் காரணமாக எட்டாவது பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவியில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற செயலாளர் நாயகம் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;*

மேற்கூறப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகவுள்ள ஒருவரை பெயர் குறிக்கும்படி அந்த அரசியற் கட்சியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

அத்துடன் மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் கூறப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. பிமல் நிரோஷன் ரத்னாயக்க வீரகோன் என்பவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

தேர்தல்கள் ஆணையாளரான மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (5) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து மேற்கூறப்பட்ட திரு. சரத் சந்திரசிறி மாயாதுன்னே எனும் உறுப்பினர் கேட்டு விலகியுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. பிமல் நிரோஷன் ரத்னாயக்க வீரகோன் என்பவர் எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2015, செத்தெம்பர் 14.

*10- 37*